வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 15**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவபிரகாஷ்பாபு | தாலுக்கா | : | மதுரை |
| தகப்பனார் பெயர் | : | பிரபாகரன் | தொழில் | : | தலைமை காவலர் எண் 1915 |
| ஊர் | : | சோழவந்தான் | வயது | : | 43/2025 |

**<u>(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)</u>**

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

நாள் 14.02.2025

**<u>அரசு தரப்பில் 15ம் சாட்சி முதல் விசாரணை</u>**

நான் தற்போது பெரியகுளம் காவல் நிலையத்திலிருந்து அயற்பணியாக தேனி மாவட்ட குற்றப்பிரிவில் தலைமை காவலராக ஆக பணியாற்றி வருகிறேன். கடந்த 04.02.2022ம் தேதி முதல் நிலை காவலராக தென்கரை காவல் நிலையத்தில் பணியாற்றியபோது, தென்கரை காவல் நிலைய குற்ற எண் 49/2022 பிரிவு 174 குவிமுச @ 302, 201 இதச வழக்கின் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையின் அசலையும், முதல் தகவல் அறிக்கையின் நகல் மற்றும் புகாரின் நகல் ஆகியவற்றை தென்கரை காவல் நிலைய ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி விரைவு தபாலாக பெற்று பெரியகுளம் நீதித்துறை நடுவர் அவர்களிடமும், மற்ற தபால்களை காவல் உயர் அதிகாரிகளிடம் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்,

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விரைவு தபாலை எனக்கு காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு கொடுத்தார்கள் என்றால் மாலை 4.30 மணிக்கு கொடுத்தார்கள். நான் பெரியகுளம் நடுவர் நீதிமன்றத்தில் எத்தனை மணிக்கு முதல் தகவல் அறிக்கையின் அசலை ஒப்படைத்தேன் என்றால் மாலை 4.45 மணிக்கு ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னிடம் எத்தனை மணிக்கு வாக்குமூலம் பெற்றார் என்றால் அன்றைய தினம் இரவு 8.00 மணிக்கு வாக்குமூலம் பெற்றார். விரைவு தபாலில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும், என்னிடம் காட்டிய பின்புதான் ஆவணங்கள் தபால் உறையில் இடப்பட்டது. சட்ட மாறுதல் அறிக்கையின் தேதி தெரியுமா என்றால் தெரியாது. முதல் தகவல் அறிக்கை எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. தென்கரை காவல் நிலையத்திற்கும், பெரியகுளம் நடுவர் நீதிமன்றத்திற்கும் எத்தனை தூரமிருக்கும் என்றால் சுமார் 500 மீ தூரமிருக்கும். 2 நிமிடங்களில் காவல் நிலையத்திலிருந்து நடுவர் நீதிமன்றத்திற்கு வந்துவிடலாம் என்றால் வாகனத்தில் வந்தால் 2 நிமிடத்தில் வந்துவிடாலம், நான் நடந்து வந்தேன். முதல் தகவல் அறிக்கையில் என்ன பிரிவு போடப்பட்டுள்ளது என்றால் 174 குவிமுச பிரிவு ஆகும். சட்ட மாறுதல் அறிக்கையில் பிரிவு 302, 201 இதச பிரிவு போடப்பட்டுள்ளது. நான், எனது உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆய்வாளரிடம் யார், யாரிடம், எந்தெந்த தபாலை எப்போது ஒப்படைத்தேன்

என்று குறிப்பாக நான் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். அங்ஙனம் நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை, முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2 மற்றும் 3 எதிரிகள் தரப்பிலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
14.02.2025
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.